**கலவான பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 01 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கலவான பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) காசுப்பாய்ச்சல் கூற்று
(ii) முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தகனக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பணத்தில் முன்னைய ஆண்டிற்குரிய வட்டியாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 106,187 தொகை மீளாய்வாண்டின் செலவினத்தில் சீராக்கப்பட்டமையால் மேற்கூறப்பட்ட பெறுமதியில் மீளாய்வாண்டின் மிகை குறைவடைந்திருந்தது.

(ஆ) தகனக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,290,135 தொகை மற்றும் பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,338,475 தொகையுமாக ரூபா 4,628,610 கூட்டுத்தொகை உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தவேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 306,068 தொகையான வரவு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 363,000 ஆக இனங்காணப்பட்டிருக்கும் போது பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 800,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 437,000 தொகை அதிகரித்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 383,000 தொகையான பெறவேண்டிய வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 562,771 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பலவின்ன கொங்கிரீட் தளத்தின் கடன் பணத்தைத் தீர்ப்பதற்காக பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தில் ரூபா 119,191 தொகை உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் நேரடியாகக் கழிக்கப்பட்டு அந்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டமையால் பிரதேச சபையின் முத்திரைக் கட்டண வருமானமாகக் கணக்கீடு செய்யப்படவேண்டிய ரூபா 119,191 தொகை மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாகக் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,277,700 ஆக இருந்த போதிலும் முத்திரைக் கட்டண கணக்கின் பிரகாரம் மேற்கூறப்பட்ட பெறுமதி ரூபா 1,964,341 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 4,313,359 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 430,000 பெறுமதியுடைய சொத்துக்கள் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் ஊடாக மூலதனமாகக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரைக் கட்டணமாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு ரூபா 701,673 தொகை செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறான பொறுப்பொன்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2013 பெப்ரவரி 12 ஆந் திகதி வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தபஸ்ஸரகந்த சுறுட்டுவத்த வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 637,426 தொகை மீளாய்வாண்டின் மூலதன உதவியின் கீழ் வருமானத்திற்கு எடுக்கப்பட்டு செலவினத்தைச் செய்வதற்குப் பதிலாக சபையின் பொது வைப்புக் கணக்கின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டில் வைப்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 574,590 தொகை பிரதான காசுக் கணக்கின் ஊடாக கணக்கு வைக்கப்படாமல் சபையின் தனியான வைப்புக் காசுப் புத்தகத்திற்கு எடுக்கப்பட்டு செலவிடப்பட்டிருந்தது.

(ஒ) வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக முற்பணமாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 35,000 தொகை தீர்க்கப்படாமல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) சம்பள மீளளிப்புப் பணம் மற்றும் உறுப்பினர்களுக்கான படிகளையும் உள்ளடக்கி மீளாய்வாண்டில் சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 8,157,667 ஆக இருந்த போதிலும் பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 8,756,130 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 598,463 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய அவ்வருமானம் ரூபா 1,748,186 ஆக இருந்த போதிலும் பேரேட்டுக்

கணக்கின் மூலம் ரூபா 1,716,686 எனக் காண்பிக்கப்பட்டமையால் பெறவேண்டிய வருமானம் ரூபா 31,500 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) அளவு மற்றும் காரண விடயங்கள் உரியவாறு கண்டறியப்படாமல் சம்பள மீளளிப்பு மற்றும் உறுப்பினர் படிக் கணக்கில் ரூபா 223,000 தொகை செலவு வைக்கப்பட்டு அப்பெறுமதி திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(க) பல வருட காலமாக தீர்க்கப்படாதிருந்த ரூபா 926,758 பெறுமதியான கடன்தொடுத்தோர் மீதியை தீர்த்து வைத்தல் தொடர்பாக மீளாய்வாண்டின் போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 147,524 செலவினக் கடன்கொடுத்தோர் ஆண்டின் செலவினத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(கி) மீளாய்வாண்டின் ஆதனவரிப் பதிவேட்டிற்கும் அப்பேரேட்டுக் கணக்கின் மீதிக்குமிடையே காணப்பட்ட ரூபா 2,798,962 தொகையான வேறுபாடு இனங்காணப்படாமலும், எவ்வித அங்கீகாரமும் இன்றி திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(கீ) மீளாய்வாண்டின் போது ஆதன வரிக்காக வழங்கப்பட்ட கழிவு ரூபா 40,693 தொகை ஆண்டின் செலவினத்திற்கு எடுக்கப்படாமல் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

(கு) தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகத்திலும் வியாபார அனுமதிப்பத்திர வருமானமாக ரூபா 963,950 தொகை இனங்காணப்பட்டிருந்தும் ரூபா 1,037,321 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 73,371 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்ட தொகை இனங்காணப்பட்டு சரிசெய்வதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(கூ) மீளாய்வாண்டின் போது பொதுச் சந்தை கடை வாடகை (5-22) இன் கீழ் வருமானத் தலைப்பொன்றின் பெறுவனவுகளுடன் ரூபா 1,203,172 தொகை பிழையாக கணக்கீடு செய்யப்பட்டதை சரிசெய்வதற்காக உரிய வருமானத் தலைப்பு இனங்காணப்பட்டு அந்த வருமானத் தலைப்பிற்கு தீர்மானிக்கப்பட்ட தொகை மாற்றுவதற்குப் பதிலாக நாட்குறிப்பு இலக்கம் 21 இன் மூலம் ரூபா 246,482 தொகை திரண்ட நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(கெ) வீதிச் செப்பினிடுகை 2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கியமையால் ரூபா 1,864,007 தொகையான வருமானமொன்று கிடைக்க வேண்டியிருந்ததுடன் அந்த நிலுவையில் மீளாய்வாண்டின் போது பற்றுச்சீட்டு இலக்கம் 23318 இன் மூலம் ரூபா 150,000 தொகையான கிடைத்த அப்பணம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறப்பட்ட நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கிருந்த நிலுவைத் தொகையான ரூபா 1,714,007 பெறவேண்டிய கணக்கு மீதியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கே) 2013 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் அழித்தல் மற்றும் ஏலத்தில் விற்பனை செய்தல் என்பவற்றுக்காக சிபாரிசு செய்யப்பட்ட ரூபா 1,271,315 பெறுமதியான பொருட்கள் தொடர்பாக குறிப்பிட்ட சிபாரிசுகள் 2014 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் நிலையான சொத்துக் கணக்கிலும் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 கணக்கு விடயங்களுக்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கட்டுப்பாட்டுக் கணக்கின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,891,925 ஆக இருந்ததுடன் பயன்பாட்டுப் பதிவேடுகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,090,911 ஆனமையால் வேறுபாடு ரூபா 4,198,986 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கடன்கொடுத்தோருக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 4,756,785 தொகையான மீதி செலவினத் தலைப்பில் சீராக்கும் போது குறைத்தும் அதிகரித்தும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 62,340 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) பிரிவு | விடயப் பொறுப்பு அமைச்சரின் முன் அங்கீகாரமின்றி புண்ணிய மற்றும் நலன்புரி செயற்பாடுகளுக்கு 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 63,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை – 1992 | |
| | நிதிப்பிரமாணம் இலக்கம் 371(2) | ரூபா 246,000 தொகையான முற்பணத்தை அதன் பிரகாரம் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய செயற்பாட்டு வருமானம் ரூபா 8,447,530 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய செயற்பாட்டு வருமானம் ரூபா 3,844,692 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாடுகளின் மிகை 120 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ஏனைய வருமான அதிகரிப்பு இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 6,498 | 1,610 | 3,925 |
| வாடகை | 970 | 6,511 | 128 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,187 | 1,331 | - |
| ஏனைய வருமானம் | 13,772 | 20,420 | 389 |

#### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை ஒப்பீடு செய்த போது ஆதனவரி மற்றும் வரி வருமானங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 303 சதவீத குறைவைக் காண்பித்தது.

### 2.3.3 ஆதன வரி

கணக்காய்வுத் திகதியான 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ஆதன வரியின் அளவு 43 சதம் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட மீதிகளாக இருந்ததுடன், அப்பெறுமதி ரூபா 1,380,130 ஆகும். அது மொத்த ஆதனவரி அலகுகளில் 12 சதவீதமாகும். இதன்படி குறைந்த அலகுகளில் அதிக சதவீதத்தில் ஆதனவரிக் கட்டணத்தை அறவிடுவதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் அது தொடர்பாக கவனம் செலுத்தி நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 01 வருடம் முதல் 49 வருடங்கள் வரை வரி செலுத்தாது புறக்கணித்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

### 2.3.4 ஏனைய வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்காக சபையில் பதிவுசெய்திருந்த 25 வாடகை லொறிகளும், 119 முச்சக்கர வண்டிகளும், 15 வான் வண்டிகளும் இருந்ததுடன் மாதமொன்றிற்கு அறவிடப்படுகின்ற கட்டணம் முறையே ரூபா 445, ரூபா 134 மற்றும் ரூபா 150 ஆகும். கட்டண அறவிடல் முறையே ரூபா 93,500, ரூபா 191,352 மற்றும் ரூபா 27,000 என உபவிதிகள் விதித்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக 15 வியாபாரிகளிடமிருந்து அறவிடவேண்டிய திறந்த வெளியரங்கு வியாபாரக் கட்டணம் முறையே ரூபா 111,340, ரூபா 58,080 மற்றும் ரூபா 46,680 என ரூபா 216,100 கூட்டுத்தொகையான வருமான அளவினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பிரதேச சபை உறுப்பினர்களின் சுகையீன நிலைமையின் காரணமாக அவர்களுக்கு செலவிடவேண்டியேற்பட்ட பிரயாணச் செலவு ரூபா 28,500 தொகை உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெறுவதன் கீழ் செலுத்துவதற்கும், உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாத உறுப்பினர்களிடமிருந்து அறவிடுதல் என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் சபை அங்கீகாரத்தின் படி செலுத்தப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியான 2014 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரையிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைக்காமையினால் உறுப்பினர்களிடமிருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதிய ப.பா.கொ.ஏ/03/(1) ஆம் இலக்க கடிதத்தின் படி ஹியூம் குழாய் பலவின்ன கொங்கிரீட் தளத்தின் மூலம் பெறவேண்டியிருந்த போதிலும், 2013 யூலை 19 இல் ரூபா 569,800 தொகை செலவில் சமகி கொங்கிரீட் தனியார் கம்பனியின் மூலம் 98 ஹியூம் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. குழாய் பெறுவதற்கான தேவை இனங்காணப்படாமல் முறையான மதிப்பீடொன்றின் மூலம் சிபாரிசின்றி கொள்வனவு செய்யப்பட்டு உறுப்பினர்களின் தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபையின் டபிள்யூபீ எல்எப் 4827 ஆம் இலக்க கெப் வாகனம் ஓடக்கூடிய நிலையில் இருக்கும் போது 2013 சனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் செப்தெம்பர் என்ற 05 மாதங்களுக்காக ஒரு மாதத்திற்கு ரூபா 120,000 படி ரூபா 600,000 கூட்டுத்தொகையானது விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரமின்றி தலைவரின் பிரயாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட தனியார் வாகனத்திற்காக வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிருவாகம்**

கலவான பொதுச் சந்தைத் தொகுதியுடன் பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட ரூபா 8,867,228 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அத்திகதி முதல் இந்த அறிக்கைத் திகதி வரை ரூபா 7,704,504 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் கைவிடப்பட்டிருந்த போதிலும் பிரதிபலன்களைப் பெறுவதற்கு எதிர்பார்த்த தரப்பினருக்காக பிரதிபலன் கிடைப்பது தொடர்ச்சியாக தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்றை நடாத்திச்செய்வது தலைவரின் பணியாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

16 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 16,443,585 தொகையான நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்